**<u>2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29.08.2017ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 04.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்பு கூட்ட பொருள்</u>**

**1.** இம்மாநகராட்சியில் ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மற்றும் குடியிருப்பு பகுதி அபிவிருத்தி (IHSDP) திட்டத்தில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் சவேரியார்பாளையம் உந்து நிலையம் மேற்கொள்ள 2014—2015ம் வருடத்திய தர விலைப் பட்டியலின்படி ரூ.28.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் BMP கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள தொகை ரூ. 31,05,452.15 விலை விகிதத்தினை ஒப்பு நோக்கியதில் 2014—2015ம் வருடத்திய தர விலைபட்டியலின்படி 11.17% மதிப்பீட்டிற்கு கூடுதலாகவும், 2015—2016ம் வருடத்திய தர விலைப் பட்டியலின்படி 0.47 சதவீதம் மதிப்பீட்டிற்கு கூடுதலாகவும் இருந்ததினை தொடர்ந்து மேற்படி பணியை ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள தொகை ரூ.31,05,452.00க்கு மேற்கொள்ளவும் கூடுதல் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழஙக மாமன்ற தீர்மான எண். 79 நாள் 01.03.2016ல் ஒப்புதல் வழஙகியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளும் பொழுது கழிவு நீரேற்று நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடம் மிகவும் தாழ்வான பகுதியாகவும் தெருவிலிருந்து தூரமாகவும் அமைந்ததால் அதனை உயர்த்தி அமைக்கவும் கூடுதல் பம்பிங அமைக்கவும், அமைக்க வேண்டிய அவசித்தினை கருதி மேற்படி பணி மேற்கொண்டதில் ரூ. 33,99,564.00க்கு செலவினம் ஏற்பட்டுள்ளது. இப்பணி அவசர அவசியம் கருதிப் பணி மேற்கொண்டதில் கூடுதலான செலவீனத் தொகை ரூ.3,50,905.00ஐ ஒப்பந்ததாரருக்கு பொது நிதியில் இருந்து வழஙகலாம். (ந.க.எண். 2568/2012/இ4).

**<u>அலுவலக குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 775</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

2. திண்டுக்கல் மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16099—1 / 2016 / பி 3—2 , நாள் 4.7.2016 ல் கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| Sl. No | Name of Work | Estimate Cost Rs. In lakh | Remarks |
|---|---|---|---|
| 1 | Providing Resource Recovery Center - Dry includes sorting conveyor, Dry washer, Pulveriser, and Baling machine | 30.00 | Item 1 to 3 the components realated to the processing facility |

| | | | |
|---|---|---|---|
| 2 | Providing Pre- processing shed and Machineries for compost yard | 300.00 | shold be grouped together as single pacakage for calling tender using PPP mode |
| 3 | Providing Shed for machineries, Admin cum lab building sanitary complex at Ponnumanthurai | 105.00 | |
| | | **435.00** | |

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 119744 / 2017/ பி 3, நாள் 24.5.2017 ல் திடக்கழிவு மேலாண்மை செயலாக்க வசதிகளுக்கான (Processsing facility) உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிக்களை மேற்கொள்ளவும், அதற்கான இயந்திரங்களை பொருத்தமான தொழில்நுட்பத்துடன் DBFOT முறையில் தனியார் முதலீட்டுடன் தனியார் பராமரிக்கும் வகையில் அமைத்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டு கட்டுமான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவற்கு உண்டான பணியான ரூ.105.00 இலட்சம் மதிப்பீட்டினை மேற்கொள்ள வழுங்கப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதி மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 5840/2016/எச்1).

| Sl.No | Name of Work | Estimate Cost rs. In lakh | Remarks |
|---|---|---|---|
| 1 | Providing Shed for machineries, Admin cum lab building sanitary complex at Ponnumanthurai | 105.00 | Item 1 should be called by item rate contract. |
| | | **105.00** | |

<u>அலுவலக குறிப்பு:-</u> மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்: 776</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**3.**திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு TN.57. எ 2186 குடிநீர் விநியோக வாகனத்திற்கு தகுதிச் சான்று புதுப்பிக்க மேற்கொள்ளப்பட வேண்டிய மராமத்துப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | குமார் ஆட்டோ கேர், ஜிடிஎன் சாலை, திண்டுக்கல் | ரூ.59400.00 |
| 2 | விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.60150.00 |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 12931 / 2017/இ3 )

<u>அலுவலக குறிப்பு</u>

1) ரூ.60,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத்தின் தீர்மான எண். 762 நாள் 10.08.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.59400/–க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர், ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 777</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**4.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு TN.57. எ 3210 குடிநீர் விநியோக வாகனத்திற்கு தகுதிச் சான்று புதுப்பிக்க மேற்கொள்ளப்பட வேண்டிய மராமத்துப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | குமார் ஆட்டோ கேர், ஜிடிஎன் சாலை, திண்டுக்கல் | ரூ.54850.00 |
| 2 | விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.55700.00 |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 12933/2017/ இ3 )

<u>அலுவலக குறிப்பு</u>

1) ரூ.55,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத்தின் தீர்மான எண். 761 நாள் 10.08.2017 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.54850/–க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர், ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 778</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**5.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு TN.57. எ 2782 குடிநீர் விநியோக வாகனத்திற்கு தகுதிச் சான்று புதுப்பிக்க மேற்கொள்ளப்பட வேண்டிய மராமத்துப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரபெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | குமார் ஆட்டோ கேர், ஜிடிஎன் சாலை, திண்டுக்கல் | ரூ.64300.00 |
| 2 | விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.65100.00 |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.12932 /2017/இ3 )

<u>அலுவலக குறிப்பு</u>

1) ரூ.65,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்ற்றத்தின் தீர்மான எண்.760 நாள10.08.2017 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.64300/–க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர், ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 779</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**6.**இம்மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் செயல்படுத்தி வரப்படுவதில் இம்மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களின் தரத்தினை மேம்பாடு செய்வதற்கு உபயோகிப்பாளரின் கருத்துக்களை பதிவு செய்ய உதவும் கருவி (Feedback devices) பொருத்துவதின் மூலம் உபயோகிப்பாளரின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு, பொது கழிப்பிடங்களின் தரத்தினை மேம்படுத்த ஏதுவாக இம்மாநகராட்சியில் பரீட்சார்ந்த அடிப்படையில் 5 கருவிகள் பொருத்தவும் அதற்கான மாத வாடகை தலா 1க்கு ரூ. 945/– 3 ஆண்டுகளுக்கு உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ளவும், மேற்கண்ட கருவிகளை ITC Ltd., (மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற) நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். /2017/எச்1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 780</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**7.** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு முருக பவனம் கலவை உரக் கிடங்கில் மாநகரில் தினசரி உருவாகும் திடக் கழிவுகள் கொட்டப்பட்டு வரப்படுகிறது. கொட்டப்படும் குப்பைக் கழிவுகளை சமப்படுத்தி மேலும் குப்பைகள் கொட்ட வசதிகள் ஏற்படுத்தும் பணி தமிழ்நாடு அரசு விவசாயப் பொறியியல் துறை செயின்டோசர் இயந்திரம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணி ஒப்பந்த காலம் 22.07.2017ல் முடிவடைந்து விட்டதால் 23.07.2017ல் முதல் மேலும் 300 மணி நேரத்திற்கு பணி மேற்கொள்ள நீட்டிப்பு செய்துகொள்ளவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 2,60,000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 14285 /2015/எச்1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 781</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**8.** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 48 வார்டுகளுக்கும் தினசரி துப்புரவு பணி மேற்கொள்ளவும், பொது கழிப்பறைகள் சுத்தம் செய்வதற்கும் எதிர்வரும் மழைக் காலத்தையும் கருத்தில் கொண்டு தேவையான கிருமி நாசினிகளை இருப்பு வைக்க வேண்டும். எனவே 10,000 கிலோ பிளிச்சிங் பவுடர் மற்றும் 500 லிட்டர் பினாயில் வாங்குவதற்கு தோராயமாக ரூ. 4.00 இலட்சம் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 13972 /2017/எச்1)

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 782** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**9.** திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு சித்தா மருந்தகங்களுக்கு சித்த மருத்துவ அலுவலர்கள் கீழ்க்காணும் தோராயமான மதிப்பிற்கு சித்த மருந்துகள் 2017–18ம் ஆண்டிற்கு தேவை பட்டியல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

| வ.எண். | சித்தா மருந்தகங்கள் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | நாகல் நகர் சித்தா மருந்தகம் | ரூ. 1,50,000/– |
| 2 | பழனிரோடு சித்தா மருந்தகம் | ரூ. 1,50,000/– |
| 3 | ரவுண்ட் ரோடு சித்தா மருந்தகம் | ரூ.1,50,000/– |
| | மொத்தம் | ரூ.4,50,000/– |

மேற்கண்டவாறு மருத்துவ அலுவலர்கள் வழங்கியுள்ள தேவைப் பட்டியல் விபரங்களின்படி மருந்துப் பொருட்கள் ரூ.4,50,000/– செலவினத்தில் அரசு மருந்து பொருள் அங்காடியின் IMCOPS Ltd., (The Indian Medical Practitioners Co-op. Pharmacy & Stores Ltd., X185, Chennai) சென்னை நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ளவும், அதற்கான செலவு தொகை 4,50,000/– ற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.13178/2017/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 783** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**10.** அரசாணை நிலை எண். 3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.ஐ.ஏ) துறை நாள் 13.04.2017 மற்றும் திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26458/2016/தி1–2 நாள் 29.05.2017ன்படி இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 676 நாள் 15.06.2017ன்படி இம்மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் குறிக்கோள்களான மாநகரில் பொது இடங்களில் மல ஜலம் கழித்தலை தடுத்து, பொது சுகாதாரத்தை மேம்படுத்திட பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகளை

பயன்படுத்துதல், தனி நபர் கழிப்பறைகள் அமைத்து பயன்படுத்துதல், சுகாதாரமற்ற கழிப்பறைகளை ஒழித்தல், திடக் கழிவு மேலாண்மை திட்டத்தை மேம்படுத்துதல், திடக்கழிவுகளை ஈரக்கழிவுகள் மற்றும் உலர் கழிவுகள் என தரம் பிரித்து வழங்குதல் மற்றும் மறு சுழற்சி மூலம் திடக் கழிவுகளை மீண்டும் பயன்படுத்துதல் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட 2 வார்டுகளுக்கு 1 நபர் வீதம் 48 வார்டுகளுக்கு 24 பரப்புரையாளர்கள் மற்றும் 8 பரப்புரையாளர்களுக்கு 1 மண்டல மேற்பார்வையாளர் வீதம் 4 மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் இப்பணிகள் அனைத்தையும் ஒருஙகிணைப்பு செய்து கண்காணிப்பு செய்திட 1 ஒருஙகிணைப்பாளர் என மொத்தம் 29 பணியிடஙகளுக்கு தேவையான தகுதியுள்ள நபர்களை அயல் ஒப்ந்தப்பணி அடிப்படையில் விநியோகம் செய்திட தகுதியான வெளி முகமை நிறுவனஙகளிடமிருந்து 19.07.2017 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட 7 நிறுவனஙகளிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

1) நியு லைப் பிலேஸ்மெண்ட் (பி) லிமிடெட், திருச்சி.
2) ஸ்கை மேன் பவர் ஏஜென்ஜீஸ், திண்டுக்கல்.
3) ஏ.எம்.கே. மேன் பவர் சர்வீசஸ், நாகர்கோவில்.
4) எக்ஸெல் நீட் அண்ட் டைடி ஏஜென்ஜீஸ், திண்டுக்கல்.
5) பால்கன் செக்யூரிட்டி சர்வீசஸ், கோயம்முத்தூர்.
6) ஸ்டார் மேன் பவர் ஏஜென்ஜீஸ், திண்டுக்கல்.
7) பைவ் ஸ்டார், சென்னை.

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை 27.07.2017ம் தேதிய மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு கூட்ட நடவடிக்கைளின் மூலம் பெறப்பட்ட 7 ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்து அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த ஸ்கை மேன் பவர் ஏஜென்சீஸ், திண்டுக்கல் நிறுவனம் தகுதி வாய்ந்தது எனவும், மேலும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை பட்டியலை ஒப்பு நோக்கவும் 27.07.2017ம் தேதிய மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் மூலம் முடிவு செய்யப்பட்டது. அதன்படி கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு கூட்டத்தில் வைக்கப்பட்டது.

**மதிப்பீடு.. ரூ. 48,08000/–**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் | கூடுதல்/ குறைவு சதவீதம் | தகுதி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | பால்கன் ஏஜென்சீஸ், கோயம்முத்தூர். | ரூ. 48,06,756/– | 0.026 குறைவு | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் நிராகரிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஏ.எம்.கே. மேன் பவர் சர்வீசஸ், நாகர்கோவில். | ரூ. 47,97,600/– | 0.216 குறைவு | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் நிராகரிக்கப்பட்டது. |
| 3 | நியு லைப் பிலேஸ்மெண்ட் (பி) லிமிடெட், திருச்சி. | ரூ. 32,87,580/– | 31.623 குறைவு | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததாலும், மதிப்பீட்டை விட 31.623% குறைவாக உள்ளதாலும், மேலும் அன்னாரது விலைப்புள்ளியில் மாவட்ட ஆட்சி தலைவரால் 2017–18ம் வருட அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தை விட பணியாளர்களின் ஊதியம் குறைவாக உள்ளதால் வேலை தரமானதாக இருக்க ஊர்ஜிதம் செய்ய இயலாத நிலையில் இருக்க வாய்ப்புள்ளதாக கருதுவதால் நிராகரிக்கப்பட்டது. |
| 4 | எக்ஸெல் நீட் அண்ட் டைடி ஏஜென்ஜீஸ், திண்டுக்கல். | ரூ. 47,99,040/– | 0.186 குறைவு | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் நிராகரிக்கப்பட்டது. |
| 5 | ஸ்டார் மேன் பவர் ஏஜென்ஜீஸ், திண்டுக்கல். | ரூ. 49,27,867/– | 2.493 கூடுதல் | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததாலும், மதிப்பீட்டை விட கூடுதலதாக உள்ளதாலும் நிராகரிக்கப்பட்டது. |
| 6 | பைவ் ஸ்டார், சென்னை. | ரூ. 48,04,800/– | 0.067 குறைவு | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததால் நிராகரிக்கப்பட்டது. |
| 7 | ஸ்கை மேன் பவர் ஏஜென்ஜீஸ், திண்டுக்கல். | ரூ. 47,96,040/– | 0.249 குறைவு | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதாலும், மதிப்பீட்டை விட குறைவாக உள்ளதாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

மேற்கண்ட 7 ஒப்பந்தப்புள்ளிகளில் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து மதிப்பீட்டை விட 0.249% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தகுதி வாய்ந்த நிறுவனமான ஸ்கை மேன் பவர் ஏஜென்ஜீஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத்தின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙக ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு தீர்மானிக்கப்பட்டதின்படி ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றத்தின் முடிவுக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.8855 /2017/எச்1)

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. 19.07.2017 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்ய 27.07.2017 மற்றும் 04.08.2017 தேதிகளில் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு கூட்டம் முடிவுகளின்படி ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்த ஸ்கை மேன் பவர் ஏஜென்ஜீஸ், திண்டுக்கல் நிறுவனம் பூர்த்தி செய்துள்ளதால் அதனை மாமன்றத்தின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவால் தீர்மானிக்கப்பட்டது.
2. வரிசை எண்.3ல் உள்ள நியு லைப் பிலேஸ்மெண்ட் (பி) லிமிடெட், திருச்சி ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாததாலும், மதிப்பீட்டை விட 31.623% குறைவாக உள்ளதாலும், அன்னாரது விலைப்புள்ளியானது மாவட்ட ஆட்சி தலைவரால் 2017–18ம் வருட அஙகீகரிக்கப்பட்ட விலை விகிதத்தை விட மேற்படி நிறுவனம் அளித்துள்ள பணியாளர்களின் ஊதியம் குறைவாக உள்ளதால் வேலை தரமானதாக இருக்க ஊர்ஜிதம் செய்ய இயலாத நிலையில் இருக்க வாய்ப்புள்ளதாக கருதுவதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மேலும், வரிசை 1, 2, 4, 5 மற்றும் 6 ஆகியவை ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யாததால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவால் நிராகரிக்கப்பட்டது.
3. வரிசை எண்.7ல் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள ஸ்கை மேன் பவர் ஏஜென்ஜீஸ், திண்டுக்கல் அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக பூர்த்தி செய்தும், மதிப்பீட்டை விட 0.249% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழஙகியதாலும் மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

**<u>தீர்மானம் எண்: 784</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**11.** திரு. தனசேகரன் என்பவர் சட்டாம்பிள்ளை தெருவில் உள்ள தனது வீட்டிற்கு முன்புறம் உள்ள பொது நடை பாதையினை ஆக்கிரமித்து வீடு கட்டிய ஆக்கிரமிப்பை அகற்றிட திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களை 3வது பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதிப்பேராணை வழக்கு எண். 12353/2017ல் இம்மாநகராட்சி சார்பாக திரு. லாரன்ஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி நடத்திடவும், மேற்கண்ட வழக்கிற்கான உத்தேச கட்டணம் ரூ. 10,000/– வழஙகவும், மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 7812/2017/எப்2).**

<u>அலுவலக குறிப்பு–</u>

1. அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 785</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---